# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**ஆணை நாள்.12.05.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 2786/B/2023**

| | | |
|---|---|---|
| திரு. நாஞ்சில் சி மனோகரன் | ... | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொது தகவல் அலுவலர்,<br>கோட்டப் பொறியாளர் க(ம)ப,<br>நெடுஞ்சாலைத் துறை,<br>கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,<br>செங்கல்பட்டு மாவட்டம்-603001. | | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (12.05.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு மனுதாரர் திரு. நாஞ்சில் சி மனோகரன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திரு.பா.தனசீலன், கோட்டப் பொறியாளர் (நெ) க(ம)ப, செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 02.08.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)-ன்கீழ் தாக்கல் செய்த புகார் மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு (12.05.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மனுவானது மனுதாரர் 11.05.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனுவாகும்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் பொது அதிகார அமைப்பால் போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, அதனை பெற்றுத் தரும்படி ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு 30.06.2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியதாக தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

5. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

**இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம்**

**வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 11.05.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள இனங்களுக்கான தகவல்கள் அடங்கிய கோப்புகள், பதிவேடுகள், ஆவணங்கள் உள்ளிட்டவற்றை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில், மேல்முறையீட்டாளரிடமிருந்து உரிய கட்டணத்தை செலுத்தக் கோரி பெற்று, தகவல்களை சான்றொப்பமிட்டு வழங்கி, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக 15.06.2026 அன்றைய தேதிக்குள் பதிவு தபால் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்குமாறு இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். CP 2786/B/2023**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   கோட்டப் பொறியாளர் க(ம)ப,
   நெடுஞ்சாலைத் துறை,
   கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
   செங்கல்பட்டு மாவட்டம்-603001.

2. மேல்முறையீட்டாளர்,
   திரு. நாஞ்சில் சி மனோகரன்,
   எண்.11, சாந்தி நகர்,
   1-ஆவது குறுக்குத் தெரு,
   கௌரிவாக்கம்,
   சென்னை-600073.
   செல்.9789934044.

Copy to: File. GP PC
13.05.26